

# STEP TOGETHER

## உங்களுக்குத் தெரிந்த ஒருவர் தவறான பாதையில் வீழ்ந்து கொண்டிருக்கிறாரா?

**உங்களால் உதவ முடியும்.**

STEP TOGETHER

இரகசிய ஆலோசனை மற்றும் உதவிக்கு:

**1800 875 204 -இனை அழைக்கவும்**
**STEPTOGETHER.NSW.GOV.AU பார்வையிடுங்கள்**

### தொடர்பில் இருங்கள்

- @steptogethernsw
- @StepTogetherNSW
- @steptogethernsw
- @steptogethernsw

NSW GOVERNMENT

**ஆரம்பக்கட்ட ஆதரவானது, மக்கள் வன்முறைத் தீவிரவாதத்தை நோக்கிச் செல்வதை நிறுத்துவதற்கு உதவும். எவ்வாறு என அவதானியுங்கள்.**

**1800 875 204 – இனை அழையுங்கள்**
அல்லது **STEPTOGETHER.NSW.GOV.AU**
எனும் வலைத்தளத்தினைப் பார்வையிடுங்கள்

Tamil

## எதையிட்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்

உங்களின் அன்புக்குரிய ஒருவரில் மாற்றங்களை நீங்கள் அவதானிக்கின்றீர்களா? ஒருவேளை அவர் வழக்கத்தை விட அதிகமாக மற்றவர்களிடமிருந்து ஒதுங்கியிருப்பவராக, கணினியில் தனியாக அதிக நேரம் செலவிடுபவராக, அதிக ஆக்ரோஷத்துடன் செயல்படுபவராக, அல்லது சமூகத்தில் பிறருடன் சகிப்புத்தன்மை குறைவடைந்தவராக மாறிக்கொண்டிருக்கக் கூடும்.

இவை உங்களுக்குத் தெரிந்த ஒருவருக்கு உதவி தேவைப்படலாம் என்பதற்கான சில அறிகுறிகளாகும். சில நேரங்களில், மக்கள் தாம் தனித்துவிட்டதாக நினைக்கும் பொழுது அல்லது அவர்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்படும்போது, அவர்கள் தங்களுடைய பலவீனங்களை இரையாக்கிக் கொள்ளும் தீவிரவாதக் குழுக்களைத் தாம் சேர்ந்தவர்கள் எனும் எண்ணம் அவர்களுக்கு ஏற்படும்.

இக் குழுக்கள் தமது சொந்த அரசியல், சமூக, சமய அல்லது கருத்தியல் மாற்றத்தைச் சாதிப்பதற்கு, வன்முறைப் பிரயோகத்தினை ஊக்குவிப்பவையாகவும், நியாயப்படுத்துபவையாகவும், தூண்டுபவையாகவும் காணப்படுகின்றன. எங்களுடைய நோக்கம் இத்தகைய வழியில் செல்லும் மக்களைப் பாதுகாப்பதாகும்.

## உங்கள் பங்கு முக்கியமானது

உங்களைச் சுற்றியுள்ளவர்கள் ஓர் எதிர்மறையான பாதையில் சென்று கொண்டிருக்கக் கூடும் எனும்போது, அதனை அடையாளம் கண்டுகொள்வதற்கான மிக ஏற்ற சூழலில் நீங்கள் இருக்கிறீர்கள். இது மிகவும் இலகுவானதாகத் தெரியும், ஆனால் சில சமயங்களில் நீங்கள் அக்கறை கொண்டுள்ள ஒருவருக்கு உதவ, அவர் சொல்வதை நீங்கள் காது கொடுத்துக் கேட்டால் மட்டும் போதும். ஒருவரைப் பற்றி முடிவு கட்டிவிடாமல், அவர் சொல்வதைச் செவிதாழ்த்திக் கேட்பதன் மூலமாக, வன்முறையை ஆதரிக்கும் குழுக்களுடன் ஒருவர் தொடர்பைத் தேடிக் கொள்வதற்கு முன்னராக, தான் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும், மேலும் சார்ந்திருக்க தனக்கு சொந்தமுள்ளதாகவும் அவர் ஓர் உணர்வைப் பெற நீங்கள் உதவ முடியும். ஆரோக்கியமான கலந்துரையாடலை ஊக்குவிக்கின்ற, மற்றும் மக்கள் தமது கருத்துக்களை வெளிப்படுத்த சௌகரியமாக இருப்பதாக உணரும் சூழலை உருவாக்குவதன் மூலமாக, நீங்கள் நேர்மறையான தொடர்பை மேம்படுத்தவும், அத்துடன் தீவிரவாதத்தின் ஆபத்துகளிலிருந்து ஒருவரைத் திசைதிருப்பவும் முடியும்.



## உங்களுக்கு உதவ Step Together இருக்கிறது

Step Together என்பது, நமது அன்புக்குரியவர்களுக்கு ஆதரவுதவியளிப்பது எப்படி, மற்றும் வன்முறைத் தீவிரவாதத்தில் ஈடுபடுவதிலிருந்து அவர்களைப் பாதுகாப்பது எப்படி என ஆலோசனை தேடும் மக்களுக்கான ஒரு ஹெல்ப்லைன் மற்றும் டிஜிட்டல் ஆதரவுதவிச் சேவையாகும். பாதுகாப்பான மற்றும் இரகசியம்பேணும் இடத்தில், தகுதிவாய்ந்த ஆதரவுதவிப் பணியாளர்களால், மற்றவர்களுக்கு உதவ உங்களுக்கு வழிகாட்டுவதற்கும், மற்றும் உங்கள் சமுதாயத்தில் பொருத்தமான ஆதரவுதவிச் சேவைகளுடன் உங்களைத் தொடர்புபடுத்தவும் முடியும்.

**1800 875 204 -இல் எங்களை அழையுங்கள், அல்லது STEPTOGETHER.NSW.GOV.AU -இனைப் பார்வையிடுங்கள்.**